**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 158/2022**

**வா.சா.1 –கந்தசாமி**

**<u>19–03–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதியால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

19. நான் 80 வருடமாக பொது தடமாக வழக்கு சொத்தை பயன்படுத்தி வருவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்துமே 1992 ஆம் ஆண்டிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றும் அவ்வாறு தாக்கல் செய்துவிட்டு 80 வருடமாக பொது தடமாக வழக்கு சொத்தை பயன்படுத்தி வருவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்வது போல் 80 வருடங்களுக்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும் 1992 ஆம் ஆண்டிற்கு பின்னிட்ட ஆவணங்களை மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

20. 1918 ஆண்டுக்கான ஆவணத்தை 1ம் பிரதிவாதியாக நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனை வாதியாகிய நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1918 ஆம் ஆண்டுக்கான ஆவணத்தை எனது தரப்பில் தாக்கல் செய்யாமல் ஆவணமாக தாக்கல் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 29.01.2022 ல் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு பின்னிட்டு என்னை நீங்கள் நேரில் அருகி அதற்கான ஆவணத்தை தரும்படி கேட்டபோது நான் ஆவணம் கொடுத்ததற்கு பின்னிட்டும் நான் ஆவணம் கொடுக்கவில்லை என்று பொய்யாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

21. பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் சொல்வது போல் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் அறிவிப்பு கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிறகு 1ம் பிரதிவாதியாகிய

உங்களை நேரில் பார்க்கவில்லை. நான் பிரதிவாதியின் ஆவணத்தை பார்த்ததில்லை என்று பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை தான் 1ம் பிரதிவாதியை நான் நேரில் அருகிய போது காட்டப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 10ல் 1ம் பிரதிவாதியை அணுகி ஆவணம் கேட்டபோது ஆவணம் தராமல் பிரதிவாதிகள் கூட்டாக இருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் பொய்யான தகவல்.

22. எனது பிரமாண்ட வாக்குமூலத்தில் மூத்த குடிமகன் என்றும் பாராமல் 1ம் பிரதிவாதி என்னை தகாத வார்த்தைகள் திட்டியதாக சொல்லி உள்ளே அதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் போலீஸ்காரர் வந்து சமாதானம் செய்து அனுப்பி விட்டார். நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. யார் யார் சேர்ந்து பிரதிவாதியின் வீட்டிற்கு ஆவணம் கேட்க சென்றோம் என்றால் யாருமே போகவில்லை. நான், கதிர்வேல், செந்தில், மரகதம் என்கின்ற தேவி, சிவக்குமார், பிரபு, மோகன் ஆகியோர்கள் சேர்ந்து 1ம் பிரஜ்வாதி வீட்டில் இல்லாத போது அதனை தெரிந்து கொண்டு பெண்களிடம் சென்று தகராறு செய்தோம் என்றால் சரியல்ல.

23. அவ்வாறு தகராறு செய்த போது 1ம் பிரதிவாதி அவர்களை உறவினரை அழைத்து உறவினர்கள் முன்னிலையில் எனது ஆவணத்தையும் உங்கள் ஆவணத்தையும் காட்டிய போது எனது தரப்பு ஆவணங்களான 1993, 1972, 1956 ஆகிய ஆவணங்களின் நகலை எனது வீட்டிலேயே விட்டுவிட்டு சென்று விட்டோம் என்றால் சரியல்ல. தாசில்தார் நான்தான் அந்த இடத்தை ஆக்கிரமித்து வைத்துள்ளதாக மாநகராட்சிக்கு அதனை அகற்ற கோரி குறிப்பாணை அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் குறிப்பாணை அது தான் என்றால் சரியல்ல. 1ம் வாதி கதிர்வேல் வட்டாட்சியரிடம் அளக்க சொல்லி மனு கொடுத்ததின் அடிப்படையில் வட்டாட்சியர் அளந்ததற்குப் பிறகும் அளக்கவில்லை என்று நான் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

24. 20.09.2024ம் தேதியன்று நிலத்தை அளக்க சொல்லி நில அளவையரிடம் நான் கொடுத்த மனுவின் அடிப்படையில் அவர் அளக்க வந்த போது நான் வீட்டை பூட்டி விட்டு சென்று விட்டேன் என்றால் எனக்கு கால் ஆபரேஷன் இருந்ததால் அவரிடம் தகவல் சொல்லிவிட்டு தான் சென்றேன். அப்படி என்றால் அளவீடு செய்ததை ஒப்புக்கொள்கிறேன் என்றால் அளக்கவே இல்லை. நான் எனது சாட்சியத்தில் பட்டாவை பெயர் மாற்றத்திற்கு கொடுத்து வழக்கு நிலுவையில் இருந்ததால் மாற்றவில்லை என்று சாட்சியமலித்து விட்டு ஆனால் உண்மையில் ஆறாவது மாதமே எனது பெயரில் எனது செல்வாக்கை பயன்படுத்தி பட்டாவை மாற்றி உள்ளேன் என்றால் விண்ணப்பம் தான் கொடுக்கப்பட்டுள்ளது பட்டாவில் பெயர் மாற்றம் இன்னும் செய்யப்படவில்லை.

25. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் 736 காலையில் எங்களுக்கு சொத்துள்ளதாக இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தெரிகிறதா என்றால் அது என்னுடைய வீட்டிற்கு பின்னால் போகும் பொது தடம். இதுதான் 736/9 காலை என்றால் சரிதான், இதற்கு முன்பு உள்ள தடம் 736/8. எனது பிரம்மான வாக்குமூலத்தில் 736/8 மற்றும் 736/ 9 சென்று தான் கதிர்வேலின் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் எந்த வழியாக சென்று எந்த வழியாக வருவோம் என்றால் புகைப்படங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக எடுக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வரைபடம் நீதிமன்ற ஆணையர் வரைந்தது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் படி கதிர்வேலுக்கு வழி மேற்கே உள்ளது என்றால் சரியல்ல.

26. 736/8 காலையில் உள்ள வழித்தடத்தில் சென்றால் 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மட்டும்தான் செல்ல முடியும் என்றால் சரியல்ல, ஆறு வீடுகள் உள்ளது. எனக்கு ஓட்டு வீடு உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றும் ஆனால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தார்ஸ் கட்டிடம் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தார்ஸ் வீடு தான் உள்ளது என்றும் மேலும் மதில் சுவர் உள்ளது என்றும் மதில் சுவரை தான் நான் பூச வேண்டும் என்று கூறி வருகிறேன் என்றால் சரியல்ல. 736/8 காலையில் எனக்கும் 1ம் வாதி கதிர்வேலுக்கும் வழி இல்லை என்று நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொய்யான

காரணங்களின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைகை தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.